பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 22 | வெள்ளிக்கிழமை | 08.11.2024 | அதிர்வு 98

## திங்கள் நள்ளிரவுடன் பிரசாரங்கள் நிறைவு

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை நள்ளிரவுடன் பிரசாரக் காலம் நிறைவடைகின்றது. 04

# மக்கள் ஆணையால் தமிழரசு மீள நிமிரும்

## பிரசாரக் கூட்டத்தில் சிறீதரன் தெரிவிப்பு



"வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வழங்கப்போகும் ஆணைதான், எமது மக்கள் விரும்பும் வகையிலான கட்சியின் மீளெழுச்சிக்கு வித்திடும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06




## தமிழர் தேசத்தை அங்கீகரிப்பதே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுட்டிக்காட்டு



(எஸ்.நிதர்ஷன்)

"இணைந்த வடக்கு – கிழக்கு தாயகத்தில் தமிழ் மக்களை தனித்துவமான இறைமை கொண்ட தேசமாக 05




கொழும்பில் வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவரைச் சந்தித்தேன். உரையாடலுக்கு மத்தியில் அவர் சுட்டிக் காட்டிய ஒரு விடயம் பகிர்ந்து கொள்ளத் தக்கது என்பதால் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இலங்கை மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் அநுரகுமார திஸநாயக்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். மக்களின் 05



# சமஷ்டிக்கு ஒருபோதும் இடமளியோம்!

## மொட்டுக் கட்சி அறிவிப்பு

"ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு 29 ஆயிரம் படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, இந்த நாட்டில் சமஷ்டி கட்டமைப்பைக் ஏற்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

"2015 நல்லாட்சி காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்புப் பணி இறுதிப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி அநுர வழங்கியுள்ளார். இலங்கை மதச் சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் எனவும், மாகாண சபைகளுக்குரிய அதிகாரம் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை மத்திய அரசு இரத்துச் செய்ய முடியாது.

மாகாண இணைப்புக்குரிய அதிகாரமும் மாகாண சபைக்குச் செல்லும். எல்லை நிர்ணயம்கூட மாகாண சபை வசம் செல்லும் வகையில் ஏற்பாடுகள் உள்ளன. எனவே, 2015 அரசமைப்பு அமுலுக்கு வந்தால் இலங்கை சமஷ்டி நாடாக மாறும். நாடாளுமன்ற அதிகாரம் குறையும். எனவே, இதற்கு இடமளிக்கக் கூடாது.

ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குப் படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, சமஷ்டி முறைமைக்கு இடமளிக்கமாட்டோம். தமிழ் டயஸ்போராக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாம் தயாரில்லை.

ஆட்சியாளர்கள் கள்வர்கள் எனக் கூறியே அநுர தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால், இன்னும் கள்வர்கள் பிடிபட வில்லை. இதன்மூலம் அவர்கள் கூறியவை பொய்கள் என்பது உண்மையாகியுள்ளன." – என்றார்.

# லொஹான் ரத்வத்தவுக்கும் அவரது மனைவிக்கும் விளக்கமறியல் நீடிப்பு



பதிவு செய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா ரத்வத்த ஆகியோரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

லொஹான் ரத்வத்தவின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தவுக்குச் சொந்தமான நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பதிவு செய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மிரிஹான பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்துப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவும், அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தக் காயங்களுடன் மூதாட்டி சடலமாக மீட்பு!

இரத்தக் காயங்களுடன் மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பியகம பிரதேசத்திலேயே மூதாட்டியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பேலியகொடை பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

75 முதல் 80 வயது மதிக்கத்தக்க, 5 அடி உயரமுடைய மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அரச நிர்வாக சேவைகளில் பதவி வெற்றிடங்கள்

பொது நிர்வாக சேவை உள்ளிட்ட பல அரச நிர்வாக சேவைகளில் 1,200 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுகின்றன என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது நிர்வாக சேவை மற்றும் கணக்காய்வு சேவைகளிலேயே அதிக வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இதுதவிர, பொறியியல் துறையில் 250 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த அனைத்து வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை துரிதகதியில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.



# இணையவழி மோசடி குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை

வட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களின் ஊடாக இடம்பெறும் நிதிமோசடி தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை கணினி அவசர பதிலளிப்பு பிரிவை மேற்கோள்காட்டி அரசாங்க தகவல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக வட்ஸ்அப் கணக்குகள் முடக்கப்பட்டு, தொடர்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு நிதி அல்லது உதவிகள் கோரி, குறுந்தகவல்கள் அனுப்பப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், போலி இணையப் பக்கங்கள், சமூக வலைத்தள கணக்குகள் மற்றும் குறுந்தகவல்கள் என்பவற்றின் ஊடாக வெவ்வேறு வங்கிகள், அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றின் போர்வையில் இவ்வாறு நிதி மோசடி இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஓ.டி.பி. என்ற ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தும் கடவு எண் மற்றும் இலத்திரனியல் வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்கான கடவுச்சொல் என்பவற்றைப் பகிர்வதைத் தவிர்க்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு இணைய நிதிக் குற்றங்களால் பாதிக்கப்பட்டிருந்தால், மக்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கீழ் உள்ள கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் dir.ccidShpolice.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா பயணிகள் விரும்பும் நாடுகளில் பட்டியலில் இலங்கைக்கு முதலிடம்




லண்டனில் நடைபெற்ற Wanderlust Reader Travel Awards 2024 இல் உலக சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் விரும்பத்தக்கத் தீவு நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

Wanderlust Reader Travel விருதுகளில் இலங்கையானது மிகவும் விரும்பத் தக்க தீவுக்கான தங்க விருதை வென்றுள்ளது. கடந்த வருடம் இந்தப் போட்டியில் 8 ஆவது இடத்திலிருந்த இலங்கை இவ்வருடம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

200,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளால் வாக்களிக்கப்பட்டு இந்த விருது இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

மேலும், அவுஸ்திரேலியா மிகவும் விரும்பத் தக்க நாடாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், டோக்கியோ மிகவும் விரும்பத் தக்க நகரம் என்ற பட்டத்தையும் பெற்றுள்ளது.



# அரிசி மற்றும் நெல் இருப்பு தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

அரிசி மற்றும் நெல் இருப்பு தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணத்தை வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக இலங்கை சந்தையில் அரிசியின் விலை அதிகரித்து அரிசி தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நிலைமையைக் கருத்திற்கொண்ட ஜனாதிபதி, பாரிய அரிசி வியாபாரிகளை அழைத்துக் கலந்துரையாடலை மேற்கொண்டதோடு, தற்போது சில்லறை சந்தையில் பேணப்பட்டு வரும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அவ்வாறே பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் பணிப்புரையின் பேரில் அரிசி இருப்புக்கள் தொடர்பில் விசேட கணக்கெடுப்பை மேற்கொள்ள நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது.

## திங்கள் நள்ளிரவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில், திங்கட்கிழமை நள்ளிரவு முதல் நாடாளுமன்றத் தேர்தல் முடிவடையும் நேரம் வரை மௌன காலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அனைத்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளன என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, தேர்தல் சட்டத்தை மீறும் எந்தவொரு நபரையும் கைது செய்யப் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறைமையான வாக்களிப்பு மூலம் நிறைவேற்றதிகாரம் அவருக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. அவற்றை அவர் சுயாதீனமாக – தற்றுணிவின் அடிப்படையில் – பிரயோகிக்கின்றாரா என்பதுதான் அவதானிக்கப்பட வேண்டிய விவகாரமாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை அதன் கட்சித் தலைவரான அநுரகுமார திஸநாயக்கவும் ஏனைய அரசியல் பிரமுகர்களும் கட்சியின் அரசியல் குழுவுக்கு கட்டுப்பட்டவர்கள். பெரும்பாலும் அந்த அமைப்பின் செயல்பாடுகள் கட்சிக் கட்டுக் கோப்பின் அடிப்படையில்தான் நடக்கின்றன. நிறைவேற்றதிகாரத்தை வைத்திருக்கும் ஜனாதிபதியான அக்கட்சியின் தலைவரையும் அதே அரசியல் குழு கட்டுப்படுத்த முயலுமானால் – அதாவது ஜனாதிபதி தம்முடைய நிறைவேற்றதிகார விவகாரங்களை கட்சியின் அரசியல் குழுவின் தீர்மானங்கள் மற்றும் முடிவுகளுக்கு அமைய முன்னெடுப்பாராயின் அரசியல் நெருக்கடியும், சிக்கல்களும் – ஏன் அரசியல் அரசமைப்புக் குழப்பங்களும் கூட – ஏற்பட இடம் உண்டு என்று அந்த ராஜதந்திரி சுட்டிக்காட்டினார்.

அநுரகுமார திஸநாயக்க என்ற தனி மனிதருக்கு மக்கள் வழங்கிய நிறைவேற்றதிகாரத்தை தற்றுணிவின்படி அவர் நிறைவேற்றாமல், கட்சியின் தீர்மானங்களுக்கு அமைய முன்னெடுப்பாராயின் எதிர்காலத்தில் பல்வேறு அரசியல் நெருக்கடிகள் உருவாகும். குறுகிய காலத்தில் அவை ஏற்பட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று அந்த ராஜதந்திரி சொன்னார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி தம்முடைய தற்றுணிவுத் தீர்மானங்களின் அடிப்படையில் எடுக்க வேண்டிய பொருளாதார முடிவுகளைக் கூட, கட்சியின் கொள்கை வகுப்பாளர்களின் விருப்பு – வெறுப்புக்கு ஏற்ப மேற்கொள்வாராயின், நெருக்கடிகள் விரைந்து வரும் என்று அந்த ராஜதந்திரி நேரத்தோடு எச்சரித்து இருக்கின்றார். பார்ப்போம் ஜனாதிபதி என்ன செய்யப் போகின்றார் என்பதை.

\+ + + +

நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு, மோசமான நிலைமை உருவாகலாம் எனப் பல தரப்புகளாலும் எச்சரிக்கப்பட்டு வருகின்றது. அரிசி நெருக்கடி வரும் என்பதை என் பத்தியிலும் மேலோட்டமாகக் கோடி காட்டி இருந்தேன். அத்தகைய அரிசி நெருக்கடி வருவதற்கு புதிய காரணம் ஒன்று இப்போது சொல்லப்பட்டிருக்கின்றது.

பியர் குடி வகை உற்பத்திக்காக அதிகளவு அரிசி வழங்கப்படுவதால் சந்தையில் அரிசித் தட்டுப்பாடும் நேரடிப் பாதிப்பும் ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்திருக்கின்றது எனச் செய்திகள் வெளிகியுள்ளன.

பியர் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பச்சை அரிசி, உள்ளூரில் நாட்டரிசியில் இருந்து பெறப்படுவதாக சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யூ.கே சேமசிங்க சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் கருத்து தெரிவித்த யூ.கே சேமசிங்க, "பியர் தயாரிக்க பச்சை அரிசி தேவை. ஆனால் பியர் தயாரிக்க தேவையான பச்சை அரிசி நாட்டரிசியில் இருந்தே பெறப்படுகிறது. எனவே, பியர் உற்பத்திக்கு அதிக சதவீதத்தை ஒதுக்கும் போது நாட்டரிசி உற்பத்திக்கு தேவையான நெல் பற்றாக்குறை உள்ளது." – என்று கூறுகின்றார்.

பியர் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதால் அரிசிப் பற்றாக்குறை என்பது புது விதமான செய்தியாக இருக்கின்றது.

## தமிழர் தேசத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கீகரிக்கவேண்டும். அதன் தனித்துவமான இறைமை – சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமையின் பிரகாரம் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தொடர்ந்து போராடுவோம்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று வியாழக்கிழமை மாலை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளிட்டார்.

இதன்போது யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்னர்.

26 பக்கங்கள் கொண்ட அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:–

இன்று இலங்கைத் தீவை மையமாகக் கொண்ட பூகோள ஆதிக்கப் போட்டியொன்று இடம்பெறுகின்றது. அந்தப் பூகோள ஆதிக்கத்தில் தமிழ் மக்களுக்கும் காத்திரமான இடமுண்டு. அப்போட்டியூடாக தமிழர்களுக்கு கிடைக்கும் முக்கியத்துவமானது, தமிழர்களுக்கான நிகரற்ற பேரம் பேசும் சக்தியாகும். இதனை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களின் அரசியல் நலன்களை முன்னிலைப்படுத்தி சர்வதேச அரசியலை கையாளுமிடத்து தமிழ்த் தேசத்துக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது எமது திடமான நிலைப்பாடு ஆகும்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு தாயகம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்பட்டு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வு மூலமே உறுதிப்படுத்தப்பட முடியும்.

13ஆம் திருத்தச் சட்டத்தை இனப் பிரச்சினை தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியாகவேனும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

கடந்த 2017 செப்ரெம்பர் 21இல் வெளியிடப்பட்ட புதிய ஏக்கிய இராச்சிய (ஒற்றையாட்சி) அரசமைப்புக்கான இடைக்கால வரைபை முற்றாக நிராகரிக்கின்றோம்.

தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தின் பிரகாரம், இணைந்த வடக்கு – கிழக்கை தாயகமாகக் கொண்டு தமிழ் மக்களை, தனித்துவமான இறைமை கொண்ட தேசமாக அங்கீகரித்து அதன் தனித்துவமான இறைமையையும், சர்வதேச சட்டங்களின் அடிப்படையில், தமிழ் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையின் பிரகாரம், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பதற்காகத் தொடர்ந்து போராடுவோம்.

மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் தாம் சுயநிர்ணய உரிமையைக் கோர உரித்துடையவர்கள் என்ற கோரிக்கைகளை முன்வைப்பின், நாம் அதனை ஏற்றுக்கொள்வோம். ஆனால், சுயநிர்ணய உரிமை அரசியலை முன்னெடுப்பதா? இல்லையா? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். பேரினவாத அடக்கு முறைக்கு எதிராக அவர்களுடன் கைகோத்து ஒன்றாகப் பயணிப்பதற்கு நாம் என்றும் தயாராகவே உள்ளோம்.

மேலும், இலங்கை அரசமைப்பில், அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான தனிமனிதனுடைய பேச்சுச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துகின்ற வகையில் இணைக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டின் 6ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

தமிழ் மக்கள் மீது இனவழிப்பு, மானுட குலத்துக்கு எதிரான குற்றம் மற்றும் போர் குற்றங்கள் புரியப்பட்டுள்ளமை வெளிப்படையானதே. இந்தக் குற்றங்கள் தொடர்பாக காத்திரமான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயம் மூலமான விசாரணையையே வலியுறுத்துகின்றோம்.

எனினும், தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆதரவுடன் உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன் காரணமாக இனப்படுகொலையாளிகள் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்துக் கொண்டுள்ளனர். இனியும் பொறுப்புக்கூறல் விவகாரத்தை ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்காமல் உடனடியாக சர்வதேச குற்றவியில் நீதிமன்ற விசாரணைக்குப் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதற்கான அழுத்தங்கள் தொடர்ந்து வழங்கப்படும்.

தவிர, வடக்கு – கிழக்கு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக பிரகடனப் படுத்தப்பட்டு, அதனை மீளக் கட்டியெழுப்புதல் (பொருளாதாரம், மனிதவளம்) நிலையான அபிவிருத்தி, இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பு என்பவற்றை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை கையாளும்முகமாக, வடக்கு – கிழக்கில் ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, அதற்கான நிதி நேரடியாகக் கிடைப்பதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், விவசாயம், சுதேச கைத்தொழில், தமிழர் மொழி – கலை – பண்பாட்டு அபிவிருத்தி, மீன்பிடித்துறை அபிவிருத்தி, கல்வி என்பன குறித்தும் முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி, தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேற்றம், அரச – தனியார் காணிகள் விடுவிப்பு, திட்டமிட்ட சிங்கள – பௌத்த மயமாக்கலுக்கு எதிர்ப்பு என்பன குறித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அக்கறை செலுத்தியுள்ளது.

தவிர, இன விடுதலைப் போராட்டத்தை ஆவணப்படுத்துதல், தமிழகம், புலம்பெயர் மக்களுடனான உறவை மேம்படுத்தல், தமிழருக்கான வெளியுறவுக் கொள்கை என்பவை குறித்தும் வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், உடனடி வாழ்வாதார பிரச்சினை, அபிவிருத்தி போன்ற அனைத்து விவகாரங்களையும் கையாள தமிழ்த் தேசியப் பேரவை என்ற கட்டமைப்பை வலுப்படுத்தவும் இந்தப் பேரவையே எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அதியுயர் அதிகார சபையாக செயற்படும் விதமாக மாற்றப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.



## மக்கள் ஆணையால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறீதரனை ஆதரித்து வன்னேரிக்குளம் வட்டாரத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இதுவரை காலமும் தமிழ் மக்களின் அரசியல் வெறுமையின் வடிகாலாக, தமிழ்த் தேசிய அடையாளமாக இலங்கைத் தமிழரசுக் கட்சி இருந்து வந்ததைப் போலவே, உட்கட்சி விரிசல்களைச் சீரமைத்து, எமது மக்களின் அரசியல் அடையாளமாகக் கட்சியை மீளக்கட்டியெழுப்பும் காலப் பணி எமக்கிருப்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

அத்தகைய பணிகளை நாம் ஆற்றுவதற்கு, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எமக்கு வழங்கப் போகும் ஆணையே உந்துசக்தியாக மாறும். இதனை உணர்ந்த எமது மக்களின் தெரிவுகள் அரசியல் அறம் சார்ந்தும், தமிழ்த் தேசியக் கொள்கை சார்ந்துமே அமையும்.” – என்றார்.







# வென்னப்புவ பகுதியில் துப்பாக்கிச்சூடு: இருவர் காயம்



வென்னப்புவ – கிம்புல்வான பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஆண் ஒருவரும் பெண் ஒருவருமே துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு செலாவணி கையிருப்பு அதிகரிப்பு



கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு செலாவணி 6.46 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த செப்டம்பர் மாதம் 5.99 பில்லியன் அமெரிக் டொலராக பதிவாகியிருந்தது.




# உயர்தரப் பரீட்சை திகதிகள் அறிவிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களின் அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணை அந்தந்த பாடசாலை அதிபருக்கும், தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டை மற்றும் நேர அட்டவணை அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் மூலமாக அனுமதி அட்டைகளைப் பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk இலிருந்து நவம்பர் 18ஆம் திகதி முதல் அவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அனைத்து பரீட்சார்த்திகளும் http://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்தில் நவம்பர் 18ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை திருத்தங்களைச் செய்யலாம் எனவும், பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட மாட்டாது எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.







# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."
– லியூசி லார்கோம்
(அமெரிக்கக் கவிஞர்)



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சாக்குப் போக்கு வேண்டாம்!

தமிழர்களுடைய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை ஆயுத முனையில் அடக்குவதற்காக பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கப் போக்குக் கொண்ட அரசாங்கங்களினால் கொண்டுவரப்பட்டு, மிருகத்தனமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டமாகும்.

ஆரம்பத்தில் தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலமாக அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு பின்னர் நிரந்தரச் சட்டமாக மாற்றப்பட்டது.

கடந்த 45 வருடங்களாக இலங்கையின் சட்ட புத்தகத்தில் உள்ள கொடூரமான - மோசமான - குரூரமான - மனிதாபிமானப் பண்பியல்புகள் அற்ற - ஒரு சட்டமாக இது உலகத்தினால் பார்க்கப்படுகின்றது. இலங்கையின் ஆட்சி பீடத்தில் இருந்த பலர் பிற்காலத்திலேனும் அதனைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பது போல இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான பல முயற்சிகள் பல மட்டங்களில் கருகட்டி முன்னேறிய போதிலும், அது தொடர்ந்து இலங்கையினுடைய சட்டமாக நீடித்து, நிலை பெற்று, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மனித குலத்தின் மாண்புகளுக்கு மாறான இந்தச் சட்டம் காலத்துக்கு காலம் அதிகாரத்திலிருந்த தரப்புகளினால் மிகக் கொடூரமாகவும் குரூரமாகவும் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது என்பதுதான் நடைமுறையில் இடம் பெற்றிருக்கின்றது.

இந்தச் சட்டத்தை ஒழிப்பதாகக் கூறி அதிகாரத்துக்கு வந்த பலர் அவ்வப்போது அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து, விடயத்தை முன்னநகர்த்தி, இடை நடுவில் கைவிட்ட பல சந்தர்ப்பங்களை நாம் சந்தித்திருக்கிறோம்.

அந்த வகையில் இன்னொரு ஆட்சிப் பீடமாக அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையிலான இந்த அரசும் அமையுமோ என்ற சந்தேகம் பலருக்கும் எழுந்துள்ளது.

எதிர்க்கட்சியில் இருந்தபோது - கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக - இந்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று ஒற்றை காலில் நின்ற அநுரகுமார திஸநாயக்கவின் தரப்பு இப்போது இந்த விடயத்தில் சற்று பின்வாங்குவதாகத் தெரிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் சட்டத்துறை செயலாளர் இந்தச் சட்டம் தவறல்ல, அதனை நடைமுறைப்படுத்தியவர்கள்தான் தவறிழைத்தார்கள் என்ற மாதிரி கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் தமக்கு ஏற்ற வகையில் அதை கொடூரமாகப் பயன்படுத்துவதற்கு இடம் அளித்தால் அது சட்டமே அல்ல என்பதுதான் உண்மை.

சட்டத்தில் தவறல்ல, சட்டத்தை நடைமுறைப்படுத்தியோரில்தான் தவறு என்ற ஜனாதிபதியின் சட்டத்துறை ஆலோசகரின் கருத்து இந்தச் சட்டத்தை நீக்குவதில் அரசுக்குள்ள நேர்மைத்தனத்தை கேள்விக்கு உள்ளாக்கி இருக்கின்றது என்பது அப்பட்டமானது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தை நாடாளுமன்ற நடவடிக்கை மூலம்தான் மாற்றி அமைக்க முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

ஆகவே இப்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய நாடாளுமன்றம் வர முன்னர் இந்தச் சட்டத்தை யாரும் மாற்றி அமைத்து விட முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

யாரும் நாடாளுமன்றம் இல்லாத சமயத்தில் இந்தச் சட்டத்தை மாற்றி அமையுங்கள் என்று கேட்கவில்லை. புதிய நாடாளுமன்றம் தங்களின் அதிகாரத்தின் கீழ் வந்தால் உடனடியாக அதைச் செய்வோம் என்ற அறிவிப்பைத்தான் ஆளும்தரப்பிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதுவும் அதிகாரத்துக்கு வர முன்னர் அந்தச் சட்டத்தை அடியோடு மாற்றுவோம் என்று ஒற்றைக் காலில் உறுதியாக நின்ற தரப்புகளிடமிருந்து அத்தகைய உறுதிமொழியைத்தான் மக்கள் உரித்தோடு எதிர்பார்க்கிறார்கள்.

இது விடயத்தில் புதிய நாடாளுமன்றம் வரட்டும் பார்க்கலாம் என்ற சுரத்தற்ற பதிலை அரசு தரப்பிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆட்சிக்கு வர முன்னர் இவ்விடயத்தில் எடுத்த அதே உறுதியான நிலைப்பாட்டை, அதிகாரத்துக்கு வந்த பின்னரும் ஆட்சித் தலைமை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் மக்களின் நியாயமான எதிர்பார்ப்பு.



# தி.மு.கவை அழிக்க வந்துள்ளவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை

## உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு

"தி.மு.கவை அழிக்க வேண்டும் என பல பேர் கிளம்பி வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை."

– இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் நேற்று நடைபெற்ற திருமண விழாவில் கலந்து கொண்டு உதயநிதி ஸ்டாலின் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திராவிட மொடல் ஆட்சியின் தொடர் வெற்றி சிலருக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. தி.மு.கவை அழிக்க வேண்டும் என பல பேர் கிளம்பி வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மக்களே பதில் கூறுவார்கள். பல அணிகளாக சிதறி கிடக்கும் அதிமுகவும், யாருமே சீண்டாத பா.ஜ.கவும் தி.மு.க. கூட்டணியில் விரிசல் ஏற்படாதா என துண்டு போட்டு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முதல்வர் திட்டவட்டமாக பதில் கூறிவிட்டார். நமது கூட்டணி கட்சி தலைவர்களும் தி.மு.க. கூட்டணியில் தான் தொடர்வோம் என உறுதியான நிலையில் உள்ளனர் .

வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 இற்கும் அதிகமான தொகுதிகளை வெல்ல வேண்டும் என முதல்வர் கூறியுள்ளார். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும். வரும் சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்து 2 ஆவது முறையாக முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்பார். 7 ஆவது முறையாக தி.மு.க. ஆட்சி அமையும். தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுகவில் எந்த தீர்மானம் நிறைவேற்றினாலும் அது நிறைவேறும். குறிப்பாக நான் இளைஞரணி செயலாளராக வேண்டும் என்று முதன் முதலில் தஞ்சாவூர் மத்திய மாவட்டத்தில் தான் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

அது நிறைவேறியது. அதன் பின்னர் அமைச்சராக வேண்டும் என்றும், துணை முதல்வராக வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுவும் நிறைவேறி உள்ளது. அதேபோல் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றுங்கள். அது தீர்மானமாக மட்டும் இல்லாமல் அதற்காக கடுமையாக உழைத்து வெற்றி பெற பாடுபடுங்கள்." – என்றார்.








# லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 57 பேர் பலி!

லெபனானில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 57 பேர் உயிரிழந்தனர்.

லெபனானில் செயல்பட்டு வரும் ஹெஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் லெபனானில் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், கிழக்கு லெபனானில் உள்ள ஹெர்மல் பகுதியில் இருக்கும் கிராமங்கள் மற்றும் நகரங்கள் மீது இஸ்ரேல் இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.


இந்த தாக்குதலில் மொத்தம் 57 பேர் உயிரிழந்ததுடன், 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க அல்-மான்ஷியா கட்டடம் முழுவதும் இத் தாக்குதலில் சேதமடைந்ததாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.









# நடிகர் சல்மான் கானைத் தொடர்ந்து ஷாருக் கானுக்கும் கொலை மிரட்டல்

## மும்பை பொலிஸார் வழக்குப்பதிவு

நடிகர் சல்மான் கானை தொடர்ந்து ஷாருக் கானுக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மும்பை பந்த்ரா பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நடிகர் ஷாருக்கானை கொலை செய்ய திட்டமிட்டு இருப்பதாக மிரட்டல் அழைப்பு ஒன்று பந்த்ரா பொலிஸ் நிலையத்தின் தொலைப்பேசி எண்ணுக்கு அடையாளம் தெரியாத நபரிடமிருந்து அழைப்பு வந்துள்ளது. ஷாருக் கான் 50 லட்சம் ரூபா பணம் கொடுக்கவேண்டும். தவறினால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மும்பை பொலிஸார், சைபர் குற்றப்பிரிவு பொலிஸாருடன் இணைந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், வழக்கு பதிவு செய்துள்ளனர். மிரட்டல் அழைப்புகளைக் கொடுத்தவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து நடிகர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய அதிகாரிகள் முயற்சித்து வருகின்றனர்.

மிரட்டல் அழைப்பு சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் இருந்து வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஃபைசான் கான் என்ற நபரின் அழைப்பேசி மூலம் மிரட்டல் அழைப்பு விடுக்கப்பட்டதை அடுத்து அந்த நபரை பொலிஸார் தேடி வருகின்றனர். இந்தச் சம்பவம் குறித்து ராய்பூர் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

சமீபத்திய மாதங்களில் இதே போன்ற தொடர் மிரட்டல்கள் சக நடிகரான சல்மான் கானுக்கும் விடுக்கப்பட்டது. ஒக்டோபர் 30 ஆம் திகதி இதேபோன்ற ஒரு கொலை மிரட்டல் நடிகர் சல்மான் கானுக்கு விடுக்கப்பட்டது. அப்போது அவரிடம் 2 கோடி ரூபா பிணைத்தொகை கேட்கப்பட்டது.

இதனிடையே நடிகர் சல்மான் கான் மற்றும் பாபா சித்திக் மகனும் என்.சி.பி. எம்.எல்.ஏவுமான ஜீஷன் சித்திக் இருவருக்கும் கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக நொய்டாவைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.






# ட்ரம்பின் வெற்றி தவறான கொள்கைகளை பரிசீலனை செய்வதற்கான ஒரு சந்தர்ப்பம்

## ஈரான் அரசாங்கம் தெரிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் பெற்ற வெற்றியானது, அங்குள்ள தவறான கொள்கைகளை மீள் பரிசீலனை செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகும் என ஈரான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் பதற்றம் நிலவிவரும் நிலையில், ஈரானின் வெளிவிவகாரச் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் அமெரிக்காவின் வெவ்வேறு அரசாங்கங்களின் கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகள் தங்களுக்கு மிகவும் கசப்பான அனுபவங்களை ஏற்படுத்தியதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்படி, டொனால்ட் ட்ரம்பின் வெற்றியானது முந்தைய தவறான கொள்கைகளை மறுபரிசீலனை செய்வதற்கான வாய்ப்பாகும் என ஈரானின் வெளிவிவகார செயலாளர் ஸ்மாயில் பகாய் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் குடியேறுவதற்கு முன்னதாக தமது உயர்மட்ட அணியைத் தெரிவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# புதிய தூதுவர்கள் ஜனாதிபதியிடம் நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்



இலங்கைக்கு புதிதாக உத்தியோகபூர்வ நியமனம் பெற்ற இரு தூதுவர்கள் நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து தமது நன்சான்றுப் பத்திரங்களை கையளித்தனர்.

எகிப்து அரபுக் குடியரசின் தூதுவர் அதிமேதகு அடெல் இப்ராஹிம் மற்றும் ஜப்பான் தூதுவர் அதிமேதகு இசோமாடா அகியோ ஆகியோர் இலங்கைக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நற்சான்றுப் பத்திரங்களை கையளித்த பின்னர் ஜனாதிபதியுடன் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.














# ஏறாவூரில் தேர்தல் சட்டத்தை மீறி பிரசாரத்தில் ஈடுபட்ட 4 பேர் கைது

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் நகரில் தேர்தல் சட்ட விதிகளை மீறி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ரெலிபோன் சின்ன ஆதரவாளர்கள் 4 பேரை துண்டுபிரசங்களுடன் நேற்று வியாழக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் நகரில் நேற்றுப் பகல் 1 மணியளில் ரெலிபோன் சின்னத்தில் போட்டியிடும் இரு வேட்பாளர்கள் சகிதம் அதிகமானவர்கள் ஆதரவு கோரி துண்டு பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது

இதனையடுத்து பொலிசார் அங்கு சென்ற நிலையில் தேர்தல் சட்டத்தை மீறி குறித்த கட்சியன் இரு வேட்பாளர்களுடன் அவர்களது ஆதரவாளர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தமையை அடுத்து 4 பேரை கைது செய்தமையுடன் அவர்களிடம் இருந்து 175 துண்டுபிரசுரங்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்வர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரும் போது நீதிமன்றில் ஆஜராகுமாறு தெரிவித்து அவர்களை பொலிஸ் பிணையில் தாங்கள் விடுவித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசியல் தீர்வுப் பயணத்தில் அபிவிருத்தியும் எம் இலக்கு

## முன்னாள் மாகாண அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கம் விளக்கம்

நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக சாத்தியமான வழிமுறைகளை பின்பற்றி புதிய அரசாங்கத்துடன் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதுடன் சமாந்திரமாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வொ பெற்றுக்கொடுக்கப் பாடுபடுவேன் என வன்னி மாவட்ட தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் கிராமமொன்றிற்கு தேர்தல் பரப்புரைக்காக சென்றிருந்தேன். அங்கு முன்னாள் போராளி ஒருவர் என்னிடம் சங்கடமான கேள்வி ஒன்றைக் கேட்டார். நீங்கள் வெற்றிபெற்றால் தேசியத்துடன் இணைந்து பயணிப்பீர்களா அல்லது மத்திய அரசாங்கத்துடன் இணைந்து பயணிப்பீர்களா என்று. நான் அவருக்கு பதில்கூறினேன், இரண்டுடனும் இணைந்து பயணிப்பேன் என்று. தேசியம் என்பது எமது அரசியல் உரிமை. அதனை பெறுவதற்காக தொடர்ந்தும் பாடுபடுவேன், அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்ச்ஜனைகளைத் தீர்த்துவைப்பதற்கும், பிரதேசத்தின் அபிவிருத்தியைச் செய்வதற்கும் மத்திய அரசின் துறைசார்ந்த அமைச்சுக்களுடனும், சர்வதேச நிதிநிறுவனங்களுடனும், புலம்பெயர் அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றுவேன்.



தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்த்துவைப்பதற்காக இதயசுத்தியுடன் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு எமது கட்சி என்றுமே தயாராக உள்ளது. அமையவுள்ள புதிய அரசாங்கத்தின் அணுகுமுறையில் மாற்றமொன்று ஏற்பட்டால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சுனையைத் தீர்த்து வைப்பது இலகுவான விடயமாகும். எனினும் அவர்களின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். தேர்தல் காலத்தில் மாறுபட்ட கருத்துக்களை அவர்கள் தெரிவித்து வருகின்றனர். ஆனாலும் அரசியல் தீர்வு கிடைக்கும்வரை பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைப் புறந்தள்ளிவிட முடியாது. அவற்றினை தீர்ப்பதற்காக மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவது தவிர்க்கமுடியாததாகும்.

கடந்த காலங்களில் மாகாண அமைச்சராக நான் இருந்தபோது மத்திய அரசின் துறைசார் அமைச்சர்களுடன்பேசிவடக்குமாகாணத்தில்பாரிய சுகாதார அபிவிருத்தி திட்டங்களை கொண்டுவருவதற்கு முடிந்தது. எமது மாகாணத்தின் தேவைகள் ஏனைய மாகாணங்களை விட வேறுபட்டவையாகும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது.

யுத்தத்தினால் காயமடைந்து சுயமாக நடமாடமுடியாதவர்களுக்கு விசேட வைத்திய அலகு முல்லைத்தீவு, மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று வடக்கு மாகாணத்தில் பல விசேட வைத்திய சிகிச்சை அலகுகளை அமைக்க முடிந்தது. மக்களின் விடிவுக்காய் தம்மை அர்ப்பணித்தவர்கள் கவனிக்கப்படாதுள்ளனர். அவர்களுக்கான விசேட திட்டங்களை செயற்படுத்தவேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும்வரை மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்காது வெறும் உசுப்பேத்தும் பேச்சுக்களை பேசிக்கொண்டிருப்பதால் பலனேதும் கிடைக்கப்போவதில்லை. - என்றார்.

# தமிழ்த் தேசியம் இனவாதம் அன்று விளக்கமளிக்கிறார் விக்னேஸ்வரன்

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவது இனவாதம் அன்று என விளக்கமளித்திருக்கின்றார் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்.

தாம் அனுப்பி வைக்கும் மாதாந்தக் கேள்வி - பதில் அறிக்கையிலேயே அவர் இந்த விளக்கத்தைத் தந்திருக்கின்றார். அதன் விவரம் வருமாறு:-

**கேள்வி : தமிழ்த் தேசியம் இனவாதமா? 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாக அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தியுள்ளதா? தற்போதைய அரசாங்கம் வட கிழக்கில் நடைமுறைச் சிக்கல்களைக் களைந்து வருகின்றது. அந்நடவடிக்கைகள் தமிழ்த் தேசியத்தையும் அதிகாரப் பகிர்வையும் உறுதி செய்வனவா?**

பதில் :- தமிழ்த் தேசியம் இனவாதம் அன்று. தமிழ்த் தேசியம் என்பது வரலாற்று ரீதியான உண்மையை நடைமுறைப்படுத்த விழைவது. வடகிழக்கு மக்கள் தமிழ்ப் பேசும் மக்கள். அவர்களுக்கு அடையாளப்படுத்தக்கூடிய வாழ்விடங்களும் கலை கலாச்சாரமும் உண்டு. அவர்கள் சட்டப்படி ஒரு தேச மக்கள்.

சரித்திர ரீதியாகவும் இனவியல் ரீதியாகவும் இந் நாட்டின் மக்கள் யாவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று மரபணு பரீட்சைகள் கூறுகின்றன. தென்னிந்திய திராவிட இனங்களுடன் வட இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களும் தென் இலங்கை சிங்களம் பேசும் மக்களும் இன ரீதியாகத் தொடர்புடையவர்கள். நாடு பூராகவும் பயணம் செய்து வரும் ஒருவர் மக்களின் முக அடையாளங்களைக் கூர்ந்து கவனித்தால் கிட்டதட்ட ஒரே விதமான முகச் சாயல்கள் வடக்கிலும் தெற்கிலும் ஆங்காங்கே தென்படுவதை அவர் அவதானிக்கலாம். ஒரு உதாரணம் தருகின்றேன். இலங்கையின் கிரிக்கட் அணியின் தலைவராக இருந்த மஹேல ஜயவர்த்தனாவின் ஒரு புகைப்படத்தை எடுத்து மேசையில் வையுங்கள். அதற்குப் பக்கத்தில் எம்முடைய கட்சியின் பிரசித்த உறுப்பினரான பொருளாதார ஆசிரியர் வரதராஜன் மகன் பார்த்தீபனின் ஒரு புகைப்படத்தை பக்கம் பக்கமாக வைத்துப் பாருங்கள். அவர்கள் இருவரும் சகோதரர்கள் என்று கூறக் கூடியதாக படங்கள் அமைவன. அவர்கள் இடையே இன ரீதியான வேற்றுமைகள் தென்படவில்லை. ஆனால் மொழி ரீதியான வேற்றுமையுண்டு. இனவியலின் படி வடக்கு மக்களும் தென்



னிலங்கை மக்களும் திராவிடர்களே. மலையக மக்களும் திராவிடர்களே. மொழி ரீதியாகவே எமது வேற்றுமை அமைகின்றது.

இலங்கையின் ஆதி மொழி தமிழ். எல்லாளனும் துட்ட கைமுனுவும் பேசிய மொழி தமிழ் மொழியே. அவர்களுள் ஒருவர் சைவத் தமிழர். மற்றவர் பௌத்த தமிழர். அவர்கள் காலத்தில் சிங்கள மொழி இன்னமும் பிறக்கவில்லை.

பௌத்தத்துடன் வந்த மொழி பாளி. மகாவம்சம் பாளிமொழியிலேயே எழுதப்பட்டது. பௌத்தம் இந் நாட்டில் பரவப் பரவ பாளி மொழிக்கலப்பு மக்கள் பேசி வந்த தமிழ் மொழியில் ஏற்பட்டது. இவ்வாறான கலப்பால் கி.பி.6ம் 7ம் நூற்றாண்டுகளில் உருவான மொழி தான் சிங்களமொழி. ஒரே இன மக்கள் மொழிவாரியாகப் பிரிந்து நிற்கின்றனர்.

இன்று சென்னையில் ஒரு புதிய மொழி பரிணமிக்கத் துடிக்கின்றது. அது தான் தமிலிஷ் மொழி. தமிழும் ஆங்கிலமும் சேர்ந்த கலப்பு மொழி. சென்னையில் புதுமொழி பேசுவோர் இனி வரக்கூடும். தெற்கத்திய மத முலான இராஜபக்சக்கள் தெலுங்கு வம்சாவழியினர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணச் சட்டமான தேச வழமை மலையாள மக்களின் மருமகாத்திய சட்டத்தைத் தழுவியது. தேசவழமைச் சட்டத்தை டச்சுக் காரர்கள் ஆக்க உதவி புரிந்த பல யாழ்ப்பாணத் தமிழ் பிரமுகர்கள் மலையாள நாட்டை அல்லது சேர நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். இலங்கை நாட்டை ஆண்ட பாண்டிய, சோழ மன்னர்களும், ஆரிய சக்கரவர்த்தி மன்னர்களும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களே. ஆதித் திராவிட மொழியின் கூறுகளே தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்களம் என்பன.

எனவே இலங்கைத் தமிழ் பேசும் மற்றும் சிங்கள மொழி பேசும் மக்கள் ஒரே இனத்தவரே. ஆனால் மொழி வாரியாக வேற்றுமைபட்டவர்.

மொழி, மத, பிரதேச, கலாசார ஒற்றுமைகளைக் கொண்ட மக்களை ஒரு தேசம் (யேவழைை) என்று சர்வ தேசச் சட்டம் அடையாளம் காட்டுகின்றது. சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ICCPR என்ற ஐக்கிய நாடுகள் உடன்பாடு சுயநிர்ணய உரிமையை மக்கட் கூட்டங்களுக்கு வழங்குகின்றது. குறித்த உடன்பாட்டின் முதலாவது உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது :-

"எல்லா மக்கட் கூட்டங்களும் சுயநிர்ணய உரித்துடையவர்கள். அந்த உரித்துப்படி அவர்கள் சுதந்திரமாகத் தமது அரசியல் அந்தஸ்தையும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியையும் தீர்மானிக்க உரித்துடையவர்கள்."

இவ்வுறுப்புரையின் படி இந்த சுயநிர்ணய உரித்து தனிநபருக்கு அல்லாமல் ஒரு மக்கட் கூட்டத்திற்கு உரிமையாகின்றது. வடகிழக்கின் தமிழ்ப் பேசும் மக்கள் சட்டப்படி ஒரு மக்கட் கூட்டம். அடையாளப்படுத்தக்கூடிய மொழி, வாழ் நிலங்கள், கலை, கலாசார வாழ்க்கைமுறையினைக் கொண்டவர்கள் அவர்கள். எனவே அவர்கள் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள். ICCPR என்ற சட்டம், தேசங்களுக்காக ஐக்கிய நாடுகளால் வகுக்கப்பட்ட சட்டம். அதன் உறுப்புரை ஒன்றில் மக்கட் கூட்டம் என்பது ஒரு தேசத்தையே குறிப்பிடுகின்றது.

அந்த வகையில் மொழி ரீதியாக இரு தேசங்கள் இந் நாட்டில் இன்று உள்ளன. வடகிழக்கில் பெரும்பான்மையினர் பேசும் மொழி தமிழ். மற்றைய மாகா

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசியம் இனவாதம் அன்று விளக்கமளிக்கிறார் விக்னேஸ்வரன்

தொடர்ச்சி▲

ணங்களில் பெரும்பான்மையினர் பேசும் மொழி சிங்களம். மொழி வாரியாக இரு மக்கட் கூட்டங்கள் இந் நாட்டில் உள்ளனர். ஒவ்வொரு மொழிவழி மக்கட் கூட்டமும் ஒரு தேசம்.

வெள்ளையர் வருகைக்கு முன் இந்தத் தீவின் பிரதேசங்கள் பிரதேச ஆட்சி அடிப்படையில் ஆளப்பட்டு வந்தன. வடக்கில் தமிழ் பேசும் யாழ் மன்னர் இருந்தார். கிழக்கில் தமிழ் சிற்றரசர்கள் இருந்தார்கள். 1833 இல் வெள்ளையர்கள் நாட்டை நிர்வாகக் காரணங்களுக்காக ஒன்றிணைத்தார்கள். ஒன்றிணைந்த நாட்டை சுதந்திரத்தின் போது திருப்பிக் கையளிக்கும் போது பிரதேச சுயாட்சிக்கு இடமளித்திருக்க வேண்டும். அது நடைபெறவில்லை. இதற்குக் காரணம் டி.எஸ். சேனநாயகவும் அவரின் சகாக்களும். அவர்கள் சோல்பரி ஆணையாளர்களின் மனம் கவர்ந்தவர்களாகக் கரவாக மாறி ஒற்றையாட்சி முறையை இந்த நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தனர். சிறுபான்மையினரை எமது சொந்த உறவுகள் போல் வழி நடத்துவோம் என்று ஆங்கிலேயர்களுக்கு உத்தரவாதம் கொடுத்துவிட்டு சுதந்திரம் பெற்றதும் பத்து இலட்சத்துக்கும் மேலான தொகையுடைய மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தார் டி.எஸ். அவர்கள். அவரின் பின் வந்த நாட்டின் பிரதமர் பண்டாரநாயக்க அவர்கள் சிங்களமொழியை முழு நாட்டின் மேலும் திணித்தார். இந்த திணிப்புடன் தமிழர் சிங்களவர் முரண்பாடு நாட்டில் வளரத் தொடங்கியது.

இன்று தமிழர்கள் தமது அடையாளத்தைத் திரும்பத் தருமாறு கேட்கின்றார்கள். அதைக் கொடுக்க மறுத்து தமிழர்தம் அடையாளத்தை இல்லாதாக்கி அவர்களைப் பெரும்பான்மையினருடன் ஒன்று கலக்க வைக்க எத்தனிக்கின்றனர் சிங்கள அரசியல்வாதிகள். அதாவது யாவரையும் சிங்களமொழி பேசுபவராக்க எத்தனிக்கின்றனர்.

தமிழர்தம் அடையாளத்தை அவர்களின் வாழ்விடங்களிலே நிலை நிறுத்த முயல்வதே தமிழ்த்தேசியம். இதற்கெதிராக சிங்களத் தலைவர்கள் இன அழிப்பில் இதுகாறும் இறங்கி வந்துள்ளனர். கலவரங்களை ஏற்படுத்தி வாழ் மனைகளில் இருந்து தமிழர்களை விரட்டல், இனப்படுகொலைகளில் ஈடுபடல், தமிழர்தம் தாயக நிலங்களை பலவிதங்களில் அபகரித்தல், படையினர் ஊடாக தமிழர்தம் இடங்களிலேயே சிங்களவரை பலவந்தமாகக் குடியிருத்தல் போன்ற இன்னோரன்ன



நடவடிக்கைகளின் ஊடாக இன அழிப்பு நடந்து வருகின்றது. இனப்படுகொலை மட்டும் இனவழிப்பு ஆகாது. ஒரு மக்கட் கூட்டத்தினரை தமது வாழ்விடங்களில் இருந்து விரட்ட எடுக்கப்படும் நடவடிக்கைகளும் இனவழிப்பு தான்.

எனவே தமிழ் மக்கள் தமது அடையாளத்தை நிலை நிறுத்தவும் அவர்களின் தொடர் இருப்புக்கு எதிராக நடாத்தப்படும் அடாவடித்தனங்களுக்கு முகங்கொடுக்கும் விதமாகவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அது இனவாதம் ஆகாது. தம்மைத்தாமே அடையாளப்படுத்தி சட்ட உரித்துக்களைக் பெறப் போராடுவது இனவாதம் ஆகாது. தமது பாரம்பரிய வாழிடங்களில் தமிழர்கள் தொடர்ந்து வாழ எத்தனிப்பது இனவாதம் ஆகாது.

அடுத்து 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு வருவோம்.

13 ஆவது திருத்தச்சட்டம் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ் அமைந்திருக்கின்றது. ஒற்றையாட்சி என்பது பெரும்பான்மையினருக்கு சாதகமானதொன்று. நாடுபூராகவும் ஒரே தேச மக்கள் வாழ்ந்து கொண்டு வந்தால் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் தரப்படும் பரவலாக்கம் (Decentralisation) உபயோகம் அளிக்கும். ஆனால் தனித்தேசமான வடகிழக்கிற்கு பரவலாக்கத்திலும் பார்க்க அதிகாரப் பகிர்வே (Devolution) உபயோகமுடைத்து. 13 ஆவது திருத்தச்சட்டம் அதிகாரப் பகிர்வு பற்றி எதையும் கூறவில்லை. அது முற்றிலும் பரவலாக்கம் பற்றியே பேசுகின்றது. அது தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொள்ளவுமில்லை. அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தவுமில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொண்டதாக எந்தத் தருணத்திலும் கொள்ள முடியாது.

தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கங்கள் விட்ட நிர்வாக, செயலாட்சி, மேலாண்மை சிக்கல்களை நீக்க முன்வந்துள்ளது. சில திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் உள்ளது. அந்த சிக்கல்களை இருக்கும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழேயே நடைமுறைப்படுத்தப் பார்க்கின்றது அரசாங்கம். அவ்வாறு நடைமுறைப்படுத்துவது தமிழ்த் தேசியத்தையோ அதிகாரப் பகிர்வையோ உறுதி செய்யாது.

ஒற்றையாட்சி முறைமை நீங்கி கூட்டு சமஷ்டி முறைமை அறிமுகப் படுத்தும் வரை இவ்வாறான நடவடிக்கைகள் தமிழர்களின் அன்றைய வாழ்வில் சில சலுகைகளை கொடுத்தவுவன அல்லது அவர்கள் வாழ்க்கை முறையில் சில நன்மைகளை உட்புகுத்துவன. அவ்வளவுதான்.

ஆனால் ஒற்றையாட்சி முறைமையானது பெரும்பான்மை மக்களின் பிடிக்குள் மற்றைய மக்கட் கூட்டங்களை பலாத்காரமாக வைத்திருக்கக்கூடிய ஒரு முறைமை. காலக்கிரமத்தில் அம் மக்கட் கூட்டங்களைத் தம் வழிக்கு மாற்றக் கூடிய வல்லமை பெற்றது ஒற்றையாட்சி.

ஆகவே கூட்டு சமஷ்டி முறை அல்லது முற்றான சுயாட்சி முறைமை வடகிழக்கிற்குக் கிடைக்கும் வரையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், அதிகாரப் பரவலாக்கம் மற்றும் நடைமுறைச் சிக்கல்களைக் களைவது என்பன ஒரு தற்காலிக சலுகை முறையே. – என்று உள்ளது.



# மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கிழக்கு ஆளுநருடன் கலந்துரையாடல்







(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அவர்களின் சங்கப் பிரதிநிதிகள் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவை நேற்றுத் திருகோணமலயில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

திருகோணமலை மாவட்ட செயலகம், இலங்கை பொலிஸ், கடற்றொழில் கூட்டுத்தாபனம், கொட்பே மீன்பிடி துறைமுகம், துறைமுக அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழு இதில் கலந்து கொண்டனர்.

இங்கு திருகோணமலை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆளுநரிடமும் உரிய அதிகாரிகளிடமும் மீனவர் பிரதிநிதிகள் ஒவ்வொன்றாக முன்வைத்தனர். மீன்பிடி தொழிலில் இடைத்தரகர்கள் கட்டாயமாக மீன் வாங்குவது, பறிமுதல் செய்யப்பட்ட மீன்களை ஏலம் விடுவதில் உள்ள சிக்கல்கள், குளறுபடிகள், மீன்பிடி துறைமுகத்தில் போதைப்பொருள் மிரட்டல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்களை கொல்வது போன்ற பிரச்சினைகள் குறித்து மீனவர் சங்க பிரதிநிதிகள் ஆளுநர் மற்றும் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

கொட்பே மீன்பிடி துறைமுகத்தில் போதிய பாதுகாப்பு இல்லை எனவும் அதற்கு போதியளவு பொலிஸ் பாதுகாப்பை வழங்க முடியும் எனவும் திருகோணமலை பொலிஸ் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாமிக்க பிரேமசிறி தெரிவித்தார்.

மேலும், தடைசெய்யப்பட்ட வலை கருவிகள் மூலம் மீன்களைம் கொல்வதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கடலோர காவல்படை மற்றும் கடற்படையினருக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

எந்தவொரு அரசியல் மற்றும் வெளியாள்களின் செல்வாக்கிற்கும் அஞ்சாமல் கடமைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கூறிய ஆளுநர், எவ்வித அரசியல் செல்வாக்கும் இன்றி தமது கடமைகளை மேற்கொள்ளக் கூடிய சூழல் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதுடன், மக்களின் நலனுக்காக பணியாற்றுமாறும் பணிப்புரை விடுத்தார்.


மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் உரையாற்றிய ஆளுநர், சில மீனவர்கள் செய்யும் தவறுகளினால் ஒட்டுமொத்த மீனவ சமூகமும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும், தற்போதுள்ள சட்டத்தின்படி மீனவர்கள் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.




# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்ற மருத்துவக் காப்புறுதித் தொகைப் பெறுமதி








**(ந.லோகதயாளன்)**

2020 முதல் 2024 வரையான காலத்தில் தமிழ் எம்.பிக்களில் நாடாளுமன்றில் மருத்துவச் செலவினத்தில் உச்சப் பட்சத் தொகையை சாள்ஸ் நிர்மலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கோவிந்தன் கருணாகரன் (ஜெனா) ஆகியோர் பெற்றுள்ளனர்.

2020 முதல் 2024 வரையான நாடாளுமன்ற காலப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவக் காப்புறுதி மூலம் எவ்வளவு மருத்துவச் செலவினத்தைப் பெற்றுள்ளனர் என 15 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரம் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சிற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப் பட்டது.


15 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இராசமாணிக்கம் சாணக்கியன், சிவஞானம் சிறிதரன், அங்கஜன் இராமநாதன், கு.திலீபன் ஆகிய 4 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் 5 வருட காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவக் காப்புறுதியாக எந்தவொரு பணத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதி கூடிய தொகையான 9 லட்சத்து 93 ஆயிரத்து 610 ரூபாவை சாள்ஸ் நிர்மலநாதன் பெற்றிருக்கும் அதே நேரம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இரண்டாவது இடத்தில் 8 லட்சம் ரூபாவினையும், கோவிந்தன் கருணாகரன் 5 லட்சத்து 91 ஆயிரத்து 275 ரூபாவினையும் பெற்றுள்ளார்.

டக்ளஸ் தேவானந்தா 4 லட்சம் ரூபாவும், எம்.ஏ.சுமந்திரன் 3 லட்சத்து 86 ஆயிரத்து 41 ரூபா, சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) 3 லட்சத்து 62 ஆயிரத்து 355 ரூபா, எஸ்.வியாழேந்திரன் 3 லட்சத்து 30 ஆயிரத்து 555 ரூபா, செல்வராஜா கஜேந்திரன் 2 லட்சத்து 76 ஆயிரத்து 500 ரூபா பெற்றுள்ளனர்.

செல்வம் அடைக்கலநாதன் 2 லட்சத்து 45 ஆயிரத்து 397 ரூபாவும், சி.வி. விக்னேஸ்வரன் 2 லட்சத்து 32 ஆயிரத்து 534 ரூபாவும், த.சித்தார்த்தன் 2 லட்சம் ரூபாவினையும் பெற்றுள்ளனர்.






# சிவாஜி, சிறிகாந்தாவின் அர்ப்பணிப்பு, தியாகத்தில் கால் தூசு அளவு கூட செல்வத்திடம் இல்லையாம்!

## குருசாமி சுரேந்திரனையும் சேர்த்து வைகின்றார் விந்தன்

சிவாஜிலிங்கத்துக்கும் சிறிகாந்தாவுக்கும் உள்ள அர்ப்பணிப்பு, தியாகம் என்பன செல்வம் அடைக்கலநாதனுக்கு கால் தூசு அளவுக்கு கூட இல்லை என ரெலோவின் நிர்வாகச் செயலாளரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்னம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேர்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே இப்படி அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த மாதம் 2 ஆம் திகதி திருகோணமலையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் கட்சியின் தலைமைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்பாளர்கள், பிரதிநிதிகள் என 35 பேர் கலந்துகொண்டனர். நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன் போது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ரெலோ சார்பில் போட்டியிட்டு படுதோல்வியடைந்த குற்றப்பின்னணி கொண்ட ஒருவரை நியமிக்கவேண்டாம் என வலியுறுத்தியிருந்தேன்.

இதேவேளை எனது பெயர் முன்மொழியப்பட்டது. இறுதியாகக் கட்சி சார்பில் எனது பெயர் நீக்கப்பட்டு இன்னொருவருடைய பெயர் புகுத்தப்பட்டது.

கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் குருசாமி சுரேந்திரனும் இணைந்து திட்டமிட்டு எனது பெயரை நீக்கியுள்ளனர். கடந்த மாகாண சபை தேர்தலில் எனக்கு வழங்கக் கட்சி தீர்மானிக்க வேண்டிய அமைச்சுப் பதவியை வழங்காமல் தனது மைத்துனருக்கு வழங்கினார். அவர் மாகாண சபை காலத்தில் பல மோசடிகளில் ஈடுபட்டார்.

கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், சுரேன் குருசாமியும் கட்சிக்குத் தெரியாமல் – வன்னி மக்களுக்குத் தெரியாமல் – அந்த மண்ணில் 75,000 ஏக்கர் நிலப்பரப்பை அரசோடு இணைந்து கபளீகரம் செய்து நயினாமடு சீனித் தொழிற்சாலையை நிறுவவும் சிங்கள குடியேற்றத்தை அமைக்கவும் திட்டமிட்டனர். இதனால் எமது கட்சியின் பெயர் தொடர்ந்து விமர்சனத்துக்குள்ளானது.

தமிழீழ விடுதலை இயக்கம் இன்று மூன்றாக பிரிந்துள்ளது. வன்னியில் உதயராசா தலைமையில் ஒரு அணியும், யாழ்ப்பாணத்தில் ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் தலைமையில் மற்றொரு அணியும் பிரிந்தன. செல்வம் அடைக்கலநாதனின் தலைமையை அவர்கள் விரும்பவில்லை.

சிவாஜிலிங்கத்துக்கும் ஸ்ரீகாந்தாவுக்கும் உள்ள அர்பணிப்பு, தியாகம் என்பன செல்வம் அடைக்கலநாதனுக்கு கால் தூசு அளவுக்கு கூட இல்லை.

அவர் மோசடி, ஊழல் பேர்வழி. பின்கதவு டீலை ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்தார். வெளிநாட்டில் எமது கட்சிக்கு ஆறு கிளைகள் ஒற்றுமையாக பலமாக இருந்தன. அவற்றை சின்னாபின்னமாகிச் சிதறடித்தவர்கள் செல்வம் அடைக்கலநாதனும் குருசாமி சுரேந்திரனுமே.

செல்வம் அடைக்கலநாதன் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என நான் அழைப்பு விடுக்கிறேன். குருசாமி சுரேந்திரன் மக்கள் மத்தியில் இருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும். இவர்கள் பற்றிய ஆவணங்களை வெளியிடத் தயார். இது தொடர்பில் பொலிஸில் முறையிடுங்கள். சட்ட நடவடிக்கை எடுங்கள். கட்சியை கூட்டி

ஒழுக்காற்று நடவடிக்கை எடுங்கள். நான் ஆவணத்தை பொதுவெளியில் கொண்டுவந்து உங்களைச் சந்திக்கத் தயார்.

நீங்கள் போராட்டத்தில் இணைந்த காலத்தில் இதுவரை இராணுவத்துக்கு எதிராக ஒரு ரவுண்ஸையாவது சுட்டிருப்பீர்களா என செல்வம் அடைக்கலநாதனிடம் கேட்கிறேன். ஒரு பங்களிப்பு இல்லை. ஓர் அர்ப்பணிப்பு இல்லை. கட்சியின் தலைவராக சொகுசாக இருந்து கட்சியின் வளங்களைச் சுரண்டிக்கொண்டிருக்கிறீர்கள்.

அமைச்சு பதவி போல நாடாளுமன்றக் குழுக்களின் தலைவராக இருந்தீர்கள். 22 அலுவலரை உங்களுக்கு தந்தார்கள். போராளியின் குடும்பத்தைச் சேர்ந்த யாரையாவது அதற்கு நியமித்தீர்களா? போராளிகளின் குடும்பங்கள் பிச்சையெடுக்கின்றன.

குருசாமி சுரேந்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றார். நான் சங்குதான். நான் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணிதான். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரெலோ வன்னி மாவடட்ங்களில் வேலை செய்யவில்லை. அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு திரைமறைவில் ஆதரவு கொடுத்தார்கள். தமிழ் தேசிய கட்சிகள், பொதுக் கட்டமைப்பு, ஊடகங்களுக்கு இது தெரியும். இங்கு சங்குக்கு வேலை செய்தவன் நான் மட்டும்தான்.

இதற்கு பிரதியுபகாரமாக ரணிலிடம் இருந்து பெருந்தொகையான பணத்தை பெற்று குருசாமி சுரேந்திரன் ஊடாக மட்டும் எட்டுக் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்.

இதன்மூலம் மீன்பிடி உபகரணங்களும் சமூக சேவைகளும் வழங்கப்படுகின்றன. வாங்கிய பணத்தை கட்சியின் ஏனைய மாவட்ட பிரதிநிதிகளுக்கு வாங்கியிருக்கலாமே. தனியாக அவருக்கு மட்டும் வழங்க வேண்டிய தேவை என்ன? அவசியம் என்ன? குருசாமி எங்கிருந்து வந்தார்? என்ன பங்களிப்புச் செய்தார்? இந்த பதிலுக்கு குருசாமி இங்கு வரவேண்டும். அடுத்த பத்திரிகையாளர் மாநாட்டில் முழு ஆவணங்களுடன் வருவேன்.

அந்த வகையில் குருசாமிக்கு ஒரு தமிழரும் வாக்களிக்கக் கூடாது. சங்குக்கு வாக்களியுங்கள். சங்கில் நேர்மையான திறமையான பலர் இருக்கின்றார்கள். மாமனிதர் ரவிராஜின் மனைவி நல்ல ஒரு தெரிவு. குருசாமி போன்றவர்களுக்கு வாக்களித்தால் எங்கள் மண் விற்கப்படும். இனமானத்தை அடகு வைத்து விடுவார்கள். – என்றார்.



# ஆறிரு தடந்தோள் வாழ்க...!

வேலினைக் கையில் ஏந்தி
வெற்றியைத் தந்த கந்தன்
மூலமாய் நின்ற மூர்த்தி
பொறியிலே வந்த கந்தன்
கார்த்திகைப் பெண்கள் ஏந்த
கந்தனாய் ஆன தெய்வம்
கலியுகம் காக்க என்றும்
கருணையாய் நிற்கும் தெய்வம்!

ஆணவம் அழித்த கந்தன்
அகவிருள் அகற்றும் கந்தன்
பேணிடும் அடியார்க் கெல்லாம்
பேரருள் ஈயும் கந்தன்
நாமெலாம் விரும்பி நிற்கும்
நல்லையில் உறையும் கந்தன்
சேவடி தொழுது நின்றால்
தரிசனம் தருவான் கந்தன்!

சூரரை வதைத்த கந்தன்
சூழ்ச்சியை அறுக்கும் கந்தன்
மாயிருள் மாயை போக
வந்தனன் ஒளியாய் கந்தன்
ஆழுமாம் பிறவி நோயை
அகற்றிட மருந்தாய் நிற்கும்
வேலுடை கந்தன் பாதம்
பற்றுவார் வீடு காண்பர்!

ஆறிரு தடந்தோள் வாழ்க
அடியவர்க் கருள்வாய் வாழ்க
ஏறிய மஞ்ஞை வாழ்க
இன்னருள் ஈவாய் வாழ்க
பேரருள் பொருளே வாழ்க
பேரின்ப மலையே வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியார் எல்லாம்!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், அவுஸ்திரேலியா.**

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருடன் தேர்தல் கண்காணிப்பாளர்கள் உரையாடல்













தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தேர்தல் கண்காணிப்பாளர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில் பல கட்சிகளையும் சந்தித்து வருகின்றனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்திற்குச் சென்று அக் கட்சியின் வேட்பாளர்களைச் சந்தித்தனர்.

கட்சியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையில் போட்டியிடுகிற வேட்பாளர்கள் உட்பட கட்சியின் பிரமுகர்களைச் சந்தித்து தேர்தல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

# சைவத்திற்கு அரசமைப்பில் முன்னுரிமை கோரி ஆமைச் சின்னத்தில் சிவசேனை சுயேச்சையாக

சைவ சமயத்திற்கு அரசமைப்பில் முன்னுரிமை கோரி சிவ சேனை தொண்டர்கள் சுயேச்சைக் குழுவாகத் தேர்தலில் களமிறங்கியுள்ளனர் என ஈழ சிவ சேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

யாழ்ஊடக அமையத்தில்நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வரலாற்று தொன்மையான சைவ சமயத்திற்கு முன்னுரிமை அளிக்காமல் புத்த சமயத்திற்குஎவ்வாறுமுன்னுரிமைஅளிக்கலாம். மதமே இந்த நாட்டை கெடுக்கிறது. புத்த மதத்துக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்காமல் சைவ சமயத்துக்கும் முன்னுரிமை அளிக்கவேண்டும் – என்றார்.



மதமாற்ற தடைச் சட்டம், பசு வதைச் சட்டம் உள்ளிட்ட விடயங்களை அமுல்படுத்தவும் சிவசேனையால் வலியுறுத்தப்பட்டது.

ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் ந.புகன்ஸ்ரீந்திரனை முதன்மைவேட்பாளராக கொண்டு ஆமைச் சின்னத்தில் சிவசேனை அமைப்பு சுயேச்சையாகப் போட்டியிடுகின்றது.




# ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கத் தீர்மானம்

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை 2030 ஆம் ஆண்டளவில் 40 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.தற்போதைக்கு 15 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் சபை குறிப்பிட்டுள்ளது.



# மதுபான போத்தல்கள், சிகரெட்களுடன் புறக்கோட்டையில் சந்தேகநபர் கைது

சுங்கத்தீர்வை செலுத்தப்படாத வெளிநாட்டு மதுபானம் மற்றும் ஒரு தொகை சிகரெட்களுடன் புறக்கோட்டையில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

210 மதுபான போத்தல்கள் மற்றும் 50,000 சிகரெட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

54 வயதான சந்தேகநபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வைத்தியர் ஷாபி பாதுகாப்பு அமைச்சில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்

வைத்தியர் மொஹமட் ஷாபி நேற்று பொது பாதுகாப்பு அமைச்சில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

இனங்களுக்கு இடையே முறுகல் நிலையைத் தோற்றுவிக்கும் நோக்கில், திட்டமிடப்பட்ட சதித்திட்டமாகப் போலியான அறிக்கையை வெளியிட்டு தன்னை கைது செய்து துன்புறுத்தியமைக்காக முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர்,



“5 ஆண்டுகள் 6 மாதங்களாக இயன்ற வரை என்னை துன்புறுத்தினார்கள். நேற்று விடுதலையானது நான் இல்லை, நீதிக்காக நின்றவர்கள் அனைவரும் தான்.

இந்த தவறு வேறு யாருக்கும் நடக்காமல் இருக்க நான் செய்ய வேண்டிய கடமைகள் சில உண்டு. எனக்கு எதிராகச் செயல்பட்ட அனைவரின் சார்பிலும் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளேன்.

என்னைக் கைது செய்ததன் பின்னரே முறைப்பாடுகளைத் தேடிச் சென்றனர். எனக்கும் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தனர் .”– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.11.2024




இன்று உங்கள் விருப்பத்துக் கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்தது போல் உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப் படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபப்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதி யின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக் கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணை யுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரிய மானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சி யான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப் படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்துக்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.11.2024




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப்படலாம். பணிச் சுமையை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது. இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்




இன்றைய முக்கியமான நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரணையும் இருந்தால் சரிகட்டிவிடலாம்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். திட்டமிட்டு பணத்தை சேமிப்பது நல்லது.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park